அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

நவீன இலக்கியம்: 'கூனல் பிறை' சிறுகதைகள் நுவலும் வடிவமும் உள்ளடக்கப் பின்புலமும்

Modern Literature: The 'Crescent Crescent' Short Stories: Form and Content Background

முனைவர் செ.ஜான்சி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை வேளாங்கன்னி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தஞ்சாவூர்-613 007. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

Dr. S.Jancy, *Assistant Professor, Department of Tamil, Annai Vailankanni Arts and Science College,*

Thanjavur -613 007. (Affiliated to Bharathidasan University)

ORCiD: https://orcid.org/0009-0006-0202-4286

Abstract

Truths acquire new content, new forms with new appearances from time to time. Life is giving us new wonderful news and beautiful experiences one by one every moment. Art is to capture that beauty, that essence, and writing is to say it. That is literature. These two aims of inculcating faith in man and making him understand himself are the basis of literature. We all grew up listening to grandmother's story. Those who saw the coming and going princes and princesses in grandmother's stories again in their dreams. The armories that made warriors of old stories; training roads; imaginary wells; Fountains of Dream; Mental mirrors. These have evolved into various forms of writing in the development of media today. This research paper talks about the background ideas of short stories in prose form in those evolutions.

Keywords: *Literature, term short story, history of short story (in brief), background, women writers, modern short stories, form, technique, genres of short story*

ஆய்வுச் சுருக்கம்

உண்மைகள் காலந்தோறும் புதிய புதிய தோற்றங்களுடன் புதிய உள்ளடக்கத்தை, புதிய உருவங்களையப் பெறுகின்றன. வாழ்க்கை நமக்கு ஒவ்வொரு கணமும் புதிய புதிய அற்புதச் செய்திகளை, அழகிய அனுபவங்களை வாரி வாரி வழங்கிக் கொண்டேயிருக்கின்றது. அந்த அழகை, அந்த மூர்த்தண்யத்தை கையகப்படுத்துவதே கலை அதைச் சொல்வதே எழுத்து. அதுவே இலக்கியம். மனிதனுக்குள் நம்பிக்கையை விதைப்பதும், அவனுக்கே அவனைப் புரிய வைப்பதுமான இந்த இரண்டு நோக்கங்களே இலக்கியத்தின் அடிப்படை. நாமெல்லாம் பாட்டியின் கதை கேட்டு வளர்ந்தவர்கள். பாட்டியின் கதைகளில் வந்து போகும் இளவரசர்களையும், இளவரசிகளையும் கனவுகளில் மீண்டும்

கண்டவர்கள். பாட்டிக் கதைகள் வீரர்களை உருவாக்கிய ஆயுதக் கிடங்குகள்; பயிற்சி சாலைகள்; கற்பனைக் கிணறுகள்; கனவின் ஊற்றுகள்; மனக் கண்ணாடிகள். இவைகளே இன்று ஊடக வளர்ச்சியில் பல்வேறு எழுத்து வடிவங்களாகப் பரிணமிக்கின்றன. அந்தப் பரிணாமங்களில் உரைநடை வடிவத்தில் இலங்கும் சிறுகதைகள் விளம்பும் பின்புலக் கருத்துக்கள் பற்றி இவ் ஆய்வுக் கட்டுரை பேசுகிறது.

கருவிச் சொற்கள் (Keywords): இலக்கியம், சிறுகதை என்னும் சொல், சிறுகதை வரலாறு (சுருக்கமாக), பின்புலம், பெண் படைப்பாளர்கள், அண்மைக்காலச் சிறுகதைகள், வடிவம், உத்தி, சிறுகதை வகைகள்.

முன்னுரை

எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி. காலந்தோறும் சமுதாயத்தில் முரண்பாடுகளும் போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது கண்கூடு. "இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கிறான். இவற்றுக்கு அவன் முகங்கொடுக்கும் விதத்திலும் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் அவன் புரிந்துகொள்ளும் விதத்திலும் அவற்றுக்கான தேர்வு முடிவுகளைத் தெரிந்துகொள்ளும் தகைமையிலுமே அவனது இலக்கியப் படைப்பின் வெற்றி தோல்வி அமையும்" (ப.13) என்கிறார் க.கைலாசபதி. குறிப்பிட்ட ஒரு இலக்கியத்தின் தரம் பூராவையும் இலக்கிய விமரிசனம் மூலம் எடுத்துச் சொல்லிவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட சிறுகதையோ, கவிதையையோ, நாவலையோ அலசிப் பார்த்து இதிலுள்ள இலக்கிய நயம், அம்சம், தரம் எல்லாம் இவ்வளவுதான் என்று எடை போட்டுச் சொல்லிவிட முடியாது. ஆனால் இன்னின்ன நயங்கள், தரங்கள், அம்சங்கள் இப்படி இப்படியாக ஏற்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்ட முடியும். "இலக்கிய உருவத்தையும், அந்த உருவத்தை (வடிவத்தை) நமக்கு நிர்மாணித்துத் தருகிற வார்த்தைகளையும், ஆசிரியரின் கருத்துக்களையும், சூழ்நிலையையும் இலக்கிய விமரிசனம் நல்ல வாசகனுக்குச் சுட்டிக்காட்ட முயலும்" (ப.25) என்று க.நா.சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். இந்த வகையில் இருபத்தொன்றாம் நூற்றாண்டு பெண் எழுத்தாளர்களுள் ஒருவராக எண்ணப்படும் தேன்மொழி (1974—) தமிழ்ச் சமூகத்திற்கு ஆக்கித் தந்துள்ள இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு கூனல் பிறை ஆகும். இதில் அடங்கிய 19 கதைகள் நுவலும் உள்ளடக்கம் பற்றி இவ் ஆய்வுக் கட்டுரையில் எடுத்தியம்பப்படுகிறது.

சிறுகதை வரலாறு (சுருக்கமாக)

கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சிறுகதை என்ற வடிவம் பெற்றுள்ள மாற்றம், செழுமை, வளர்ச்சி, வடிவச்சோதனைகள், பரிசோதனை முயற்சிகள் போன்றவை பெரும் மாற்றங்களை நிகழ்த்தியுள்ளன. தமிழில் சிறுகதை வடிவத்தின் முன்னோடி வ.வே.சு. ஐயர் (சுப்ரமணி இரமேஷ், ப.186). இவரைத் தொடர்ந்து பி.எஸ்.ராமையா, கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், சிசு.செல்லப்பா, பி.எம்.கண்ணன், சிட்டி (எ) பெ.கோ.சுந்தரராஜன், கு.அழகிரிசாமி, டி.எஸ்.சொக்கலிங்கம், சிதம்பர ரகுநாதன், தி.நா.சுப்பிரமணியம், ராஜாஜி எனப்படும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் முதலியோர் ஆவர். சிறுகதையின் உருவத்தையும் வடிவத்தையும் தமிழ் மொழியை எளிமைப்படுத்தி

வளமாக்கிய முதல் சிறுகதை சிற்றிதழ் 'மணிக்கொடி' (ப.28) என்று தி.செந்தமிழ்ச்செல்வி ஆராய்ந்து கூறியுள்ளார். இஃது இவண் மனங்கொள்ளத்தக்கதாகும். “சிறுகதை எழுதிய முதல் தலைமுறை பெண் எழுத்தாளர்களில் முதல்வர் என்ற முறையில் அவருடைய கதைகள் தனிக் கவனத்திற்குரியவை என்பதை நினைவுத் தீ எனும் தொகுப்பு நூல் பின்னட்டையில் குறிப்பு காணப்படுகிறது.” (நூல் பின்னட்டை). இவர் கி.பி. 1932இல் புதுமைப்பித்தனை மணந்தவர். இவர் பெயர் கமலா. 1935இல் இவருடைய முதல் சிறுகதை தினமணி பாரதி மலரில் வெளிவந்தது. இவருடைய சிறுகதைத் தொகுப்பான காசுமாலை 1971இல் வெளிவந்தது (காலச்சுவடு பதிப்பகம், ப.3) என்பது இவண் குறிப்பிடத்தக்கது. இதன் பின்னரே தமிழ்ச் சிறுகதைத் சூழலில் வாஸந்தி, சிவசங்கரி, திலகவதி, சிவகாமி, கிருஷங்கினி, சுசீலா, தமயந்தி, அம்பை, பாமா போன்றோர் பரிணமித்தனர்.

இலக்கியம் — விளக்கம்

இலக்கியத்தை இலக்கு + இயம் எனப் பிரிக்கும்போது இலக்கு என்பதற்கு விளக்கம், நோக்கம், கொள்கை, குறிக்கோள் எனப் பொருள் கொண்டு, இயம் என்பதனை ஒலிப்பது, கூறுவது, வெளிப்படுத்துவது எனப் பொருள் கொள்ளின் “நம் குறிக்கோள்களையும், கொள்கைகளையும் இயம்புவது, விளக்குவது இலக்கியம் எனக் கொள்ளலாம்” (ப.8) என்று ச.வே.சுப்பிரமணியன் விளக்கம் தருகிறார்.

இலக்கியம் என்பது உண்மையான வாழ்விலிருந்து எதார்த்தமாகப் படைக்கப்படும். அவ்வாறு படைக்கும்பொழுது விழுமிய உணர்வுகளே இடம்பெற வேண்டும் என்பதும்; அந்த நல்லுணர்வுகளே மக்களுடைய நல்வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும்; அவர்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டவேண்டும்.

> “உயர்ந்த எண்ணங்களையும் சிறந்த கொள்கைகளையும் அவை கொண்டிருப்பதோடு கற்பார்தம் மனமாசகற்றி அவர்களை இறவாத இன்ப அன்பில் ஆழ்த்த வேண்டும்” (ப.6)

என்று கு.முத்துராசன் விளக்குகின்றார். நவீன இலக்கியம் / புத்திலக்கியம் என்று அழைக்கப்படுவனவற்றுள் ஒன்றான சிறுகதை இலக்கியம் இந்த இன்பத்தினை வழங்கிக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததும் இன்று செவ்வியல் இலக்கியங்கள் என அழைக்கப்படும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் “சிறுகதை” என்ற சொல் இடம்பெறவில்லை.

சிறுகதை என்னும் சொல்

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சைவத்திருமகன் அருட்பிரகாச வள்ளலார் அருளிய சைவ இலக்கியமாகிய திருவருட்பா வில் அடங்கிய இரண்டாவது திருமுறையில் "நாடக விண்ணப்பம்" பகுதியில்

கல்வி வேண்டிய மகன்தனை பெற்றோர்

கடுத்தல் ஓர்**சிறு கதை**யிலும் இலைகாண்(பா.10)

எனும் தொடரில் "சிறுகதை" சொல் பதிவு காணப்படுகின்றது. வேறு எந்தவொரு பழஇலக்கியங்களிலும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. நவீன(கால) இலக்கியம் என்பதாகக் கொள்ள இடமளிக்கிறது.

பெண் படைப்பாளர்கள்

நவீன இலக்கியங்களாகிய நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, மொழிபெயா்ப்பு, பயணக் கட்டுரை, திறனாய்வு போன்ற துறைகளில் பெண் படைப்பாளிகள் தோன்றி; தங்கள் படைப்புத் திறத்தால்; சமுதாயத்தால் புகழ் பெற்றுள்ளனர். இவர்களுள் இன்று இயங்கிக் கொண்டிருப்பவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக உமா மகேசுவரி (1971—); அ.வெண்ணிலா (1971—); சு.தமிழ்ச்செல்வி (1971—); கவிதா சொர்ணவல்லி (இவரது பிறந்த ஆண்டு எந்த ஊடகத்திலிலும் பதிவு இல்லை அநேகமாக 1970-1975க்குள் இருக்கலாம் என்பது ஆய்வாளரின் கணிப்பு); குட்டி ரேவதி (1974—); தமயந்தி (1975—); முதலியோர்களின் சமகாலத்தவர் தேன்மொழி (1974—) தமிழ்ப் படைப்புலகில் பரிணமிக்கின்ற இவா் தமிழ் எழுத்துலகில், பல்வேறு துறைகளில் தடம் பதித்துத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளார். இவர் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பின் விவரத்தினை *வரலாற்றை எழுதும் பெண்கள் — ஐந்து பெண் வரலாற்று அறிஞர்கள் குறித்த அறிமுகமும் படைப்புகளும்* என்ற நூல், "சிறுகதை - 3; கவிதை — 2; நாவல் — 1; மொழிபெயர்ப்பு — 3; கட்டுரை — 1; கலை வரலாற்று ஆய்வுகள் — 3; தொகுப்புகள் — 2" (மேற்படி நூல் பின்னட்டை) ஆகிய 15 நூல்களுக்குச் சொந்தக்காரர் என்பதை அறியச் செய்கிறது.

அண்மைக்காலச் சிறுகதைகள்

ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமான கதைகள் உருவாகியிருக்கின்றன; பல கதைகள் தேச எல்லைகள் கடந்து உலகப் பொதுக் கதையாகவும் பேசப்படுகின்றன. எழுத்து மரபில் பேசப்பட்ட கதைகளைவிட வாய்மொழி மரபில் பரவிய கதைகளே இன்றும் பெரும்பான்மை மக்களால் பேசப்படுவதாக இருக்கிறது; வாழ்க்கை நெறியாக மேற்கொள்ளப்படுகிறது. தற்காலத்தில் தமிழ்ச் சிறுகதை வடிவம் காட்டாற்று வெள்ளம்போலப் பெருக்கெடுத்து ஓடுகிறது. இன்றைய பெண் படைப்பாளர்களுள், தமிழ்ச் சிறுகதையாளர்களில் தோ்ந்த

ஒருவரான அம்பையைப் பெண்ணியச் சிந்தனையாளர் என்று கூறப்படுகின்றனர். இவரைப் பற்றி ஆய்வாளர் சுப்பிரமணி இரமேஷ்,

> "ஐம்பதுகளுக்குப் பிறகுதான் பெண்கள் சிறுகதையை வடிவ உணர்வுடன் எழுதத் தொடங்கினர்; இது எழுபதுகளில் அம்பையின் எழுத்தில் தீவிரமடைந்தது. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதிய நோக்கில் இன்றைய வாழ்க்கையின் புதிய அம்சங்களையும் சிக்கல்களையும் கையாள முயன்றிருக்கிறார்" (ப.212)

என்று தம் "தற்காலப் பெண் சிறுகதைகள்" எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மேற்படி ஆய்வாளர் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகப்படுகிறது.

வடிவம்

கலை இலக்கியத் துறையில் உருவ/வடிவ அமைதி என்பது இன்றியமையாததொரு அத்தியாவசிய அம்சம்தான்; உருவ/வடிவ அமைதி இல்லாதது கலையாகவும் இருக்க முடியாது. "வடிவம்" என்ற பதத்திற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

> "கலை, இலக்கியங்களில் ஒரு படைப்பு உருவாக்கப்படும் விதம், உத்தி, அமைப்பு முதலியன; உருவம்; form. இந்த அனுபவத்தைக் கதை வடிவத்தில் சொல்வது கடினம் (எஸ்.ராமகிருஷ்ணன், ப.1196)

ஆகிய பொருள்களைத் தருகின்றது. 1920கள் முதற்கொண்டே சிறுகதையின் உள்ளடக்கம், உருவம்/வடிவம் ஆகியவை வளர்ச்சி கண்டு வந்துள்ளன. உள்ளடக்கம் என்பது "1. பேச்சில் அல்லது எழுத்தில் அடங்கியுள்ள பொருள், செய்தி contend. subject matter என்றும்; சொல் அல்லது செயல் வெளிப்படையாக இல்லாதிருத்தல்" (வெ.முருகன், ப.98k) என்றும் பால்ஸ் அகராதி தெளிவுறுத்தியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். வடிவத்தில் பல்வேறு போக்குகள் ஏற்பட்டாலும் சிறுகதை இன்றளவும் வளர்முகத் துறையாகவே உள்ளது. கோ.கேசவன் தன் தமிழ்ச் சிறுகதைகளில் உருவம் எனும் நூலில்,

> "சிறுகதையின் உள்ளடக்கத்தைத் தேர்ந்தபின் எழுத்தாளனுக்கு வடிவமே முதன்மையாகி விடுகின்றது. உள்ளடக்கத்தோடு வடிவம் பிரிக்க இயலாதவகையில் முழுமையான இணைப்பு கொண்டுள்ளதெனினும், சில கருத்துக்களை / உணர்வுகளை / பிரச்சினைகளை எழுத முடிவு செய்த பின்னர் அவற்றை வெளிப்படுத்தும் முறையே முதன்மை ஆகின்றது . . . . 1930களில் தி.ஜ.ரங்கராஜன், புதுமைப்பித்தன் ஆகியோரிடத்தில் காணப்பட்டது. அது தொடங்கி இன்றுவரை பல போக்குகளில் வடிவ அம்சங்கள் காணப்படுகின்றன" (ப.138)

என்று விளக்குகின்றார்.

பின்புலம்

பின்புலம் என்பதற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பின்னணி என்னும் சொல்லின் முதல் மூன்று பொருள்களில்; see பின்னணி in the sense of 1, 2 and 3 என்று பொருள் விளக்கம் தருகிறது: 1. (ஒரு காட்சி, புகைப்படம் போன்றவற்றில்) முக்கியமானதாக அமைவதற்குப் பின்புறத்தில் காணப்படுவது அதாவது ஆங்கிலத்தில் background என்றும்; 2. கதை முதலியவற்றில் பாத்திரங்கள் அல்லது மனிதர்கள் செயல்படும் தளம் என்றும்; background 3. ஒரு நிகழ்ச்சி நிகழ்வதற்கு வெளிப்படையாகத் தெரியாத தூண்டுதல் அல்லது காரணம்; background என்றும் மூன்று வகையான பொருள்களைக் குறிப்பிட்டுத் தந்து, ஆங்கிலத்தில் background என்னும் ஆங்கிலச் சொல் மூன்றுவகை பொருள் விளக்கத்தில் மேற்படி அகராதி உறுதி செய்கிறது (எஸ்.ராமகிருஷ்ணன், பக்.975-976). இக்கட்டுரைக்கு பின்புலம் என்ற சொல் பொருளாக மேற்படி அகராதி விளக்கம் தருகின்ற 2இல் குறிப்பிட்டுள்ள பொருளைப் பின்பற்றி இவ் ஆய்வுக்கட்டுரையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

உத்தி

வடிவம் உருவாவதற்குக் காரணமாக விளங்குவது உத்தி என்பதாகும். மேலைநாட்டு அறிஞர் மார்க் ஸ்காரர் (Mark Schorer) “Technique as discovery” எனும் கட்டுரையில், “உள்ளடக்கத்திற்கும் (அல்லது அனுபவத்திற்கும்), முயன்று அடையப்பட்ட உள்ளடக்கத்திற்கும் அல்லது கலைக்கும் உள்ள வேறுபாடே உத்தி” (மேற்கோள்: மா.இராமலிங்கம், ப.91) எனச் சுட்டிக் காட்டுகிறார். மேலும், இதைத் தொடர்ந்து விளக்கும்போது “நான் உத்தியைப் பற்றிப் பேசினால், அதுவே எல்லாவற்றையும் பற்றிப் பேசியதாக ஆகிவிடும். உத்தியே, எழுத்தாளனின் அனுபவத்தை அல்லது கதையின் நுவல்பொருளை எழுதும்படி செய்கிறது. நுவல்பொருளை உணர்த்தவும், அதுபற்றிக் கவனிக்கவும் உத்தி ஒன்றே ஏதுவாக அமைகிறது” (மேலது., ப.91) என்றும் அது கண்டு பிடித்தற்கும் பரிசோதனைக்கும் உரியது என்றும் குறிப்பிடுகிறார்.

சிறுகதை வகைகள்

“சிறுகதை” என்னும் பதத்திற்கு “ஒரே அமர்வில் படிக்கக் கூடியதான சிறிய புனைகதை — short story” (வெ.முருகன், ப.314) என்று அகராதி வரையறுத்துக் கூறுகிறது. இதன் அடிப்படையில் கடந்த பத்தாண்டுகளில் வெளிவந்த சிறுகதையின் வழியே, ஆய்வாளர் சுப்பிரமணி இரமேஷ், தற்காலத்தில் தமிழில் எழுதப்படும் சிறுகதைகளை ஐந்து வகையாகப் பிரித்துக் காட்டுகிறார்.

1. பொதுவான சிறுகதைகள்
2. புதுவகைச் சிறுகதைகள்
3. தலித்திய சிறுகதைகள்
4. பெண்ணியச் சிறுகதைகள்
5. வாய்மொழி மரபுச் சிறுகதைகள்

என்பனவாம் (ப.187). இப்பகுப்பில் தேன்மொழியின், ‘கூனல் பிறை’ என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் “புதுவகை சிறுகதைகள்” என்னும் பிரிவுக்குள் அடங்கியிருக்கின்றது.

‘கூனல் பிறை’ (கூ.பி.) சிறுகதைத் தொகுப்பில் உள்ள 19 கதைகள் அகர நிரல்படுத்தி கதைகளின் உள்ளடக்கம் விளக்கிக் கூறப்படுகிறது.

1. அசகியம் (கூ.பி., பக்.101-106)

“அசகியம்” கதை ஒரு பூனையைப் பற்றியது. பூனை அடிக்கடி வீட்டிற்கு வருகின்றது. வீட்டிலுள்ள பெண்மணி அப்பூனையின் செயல்களை வெறுக்கிறாள். அவளுடைய கணவனும் அவ்வாறே. பூனையை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று எண்ணுகிறாள். ஒருநாள் வீட்டில் வந்து விளையாடிக் கொண்டிருந்த பூனையைப் பிடிக்க முயல்கிறாள். அது வெளியில் ஓடவே விரட்டிக் கொண்டு ஓடுகிறாள். எதிரே துப்பாக்கியுடன் வந்த குறவன் துப்பாக்கியால் பூனையைச் சுட்டுவிடுகிறான். அது இறந்தது. மகிழ்ச்சியுடன் அவள் வீட்டில் உறங்கிக் காலையில் எழுகிறாள். வேறொரு பூனை அங்கே வந்து எதையோ நோக்கிக் கொண்டிருக்கிறது. ஒன்று போனால் இன்னொன்று வரத்தானே செய்யும் என்ற முடிவு இக்கதை. ஜெயகாந்தனின் “அக்கிரகாரத்தில் பூனை” என்ற கதையை ஒட்டி இது அமைந்துள்ளது (எஸ்.வையாபுரிப் பிள்ளை, “அனுபந்தம்”, ப.55). அசகியம் — தாங்கக்கூடாதது; தூய்மையின்மை; அருவருப்பு என்பது பொருள்.

2. அவரோகி (கூ.பி., பக்.73-82)

தந்தை நோய்வாய்ப்பட்டது குறியீடாகக் கூறப்பட்டுள்ளது. கதைகளில் வரும் குறியீடுகளை வாசிக்க வேண்டும் (ரவிக்குமார், ப.7) என்பதற்கிணங்க இக்கதை சொல்லப்பட்டிருக்கிறது. அப்பாவும் மகளுக்குமான உறவு இக்கதை. கதையில் தன் அப்பாவைப் பற்றி மகள் கூறும் அனுபவங்கள் புனையப்பட்டுள்ளன. உடல் நலமில்லாதவர் தந்தை. கை, கால்கள் இழுத்துக் கொண்டது ஒருசமயம். பேச்சு உளறல். சிரிப்பது, அழுவது ஆகியன செயல்கள். “என்னைக் காப்பாற்று, நீ மனசு வச்சா முடியும்” (பக்.81-82) எனக் கூறி அடிக்கடி மருத்துவரையும் மாற்றச் சொல்கிறார். மணமான அம்மகள் கணவர் வீட்டுக்கே அப்பாவைக் கொண்டு வந்து விட்டார். எங்கு சென்றும் அப்பாவுக்குக் குணமாகவில்லை. அடிக்கடி மகளிடம் எதை எதையோ பேசி முறையிடுவார். இறுதியில் தேவாலயத்துக்கு அழைத்துச்சென்று வேண்டிக் கொள்கிறாள். “என்ன வேண்டினாய்?” என்ற அவள் தந்தைக்கு “நீங்க முழுதும் குணமாயிடனும் அல்லது நகரஇயலாத குழந்தையைப் போல் படுத்த படுக்கையாயிடனும்னு வேண்டிக் கொண்டேன்” (ப.82) என்றாள். உறவுகளைப் போற்றும் மனம் இக்கதையில் வெளிப்படுகிறது. பெண்மனம் தந்தைக்குத் தன்னைத் தியாகம் செய்யும் பாங்குடையது என்பது இது. தந்தைக்காக மகள் படும் பாட்டை அ.குணசேகரனின் ‘இல்லாமல் இருத்தல்’ கதைத் தொகுப்பிலுள்ள “பற்றி” என்ற கதையில் காணலாம் (அ.குணசேகரன், “பற்றி”, பக்.53-54). அவரோகி — ஆலமரம் என்பது பொருள்.

3. ஆரியமாலை (கூ.பி., பக்.91-100)

ஆரியமாலையை சோமாசிப் பட்டர்கள் வளர்த்தனர். ஆரியமாலை காத்தவராயனிடம் அன்பு கொண்டாள். அவன் மாறுவேடம் கொண்டு அவள் காதலை அடைய முயன்றான். காத்தவராயன் அவளைக் கடத்தி வந்துவிட்டான். வண்ணமுத்தம்மா காத்தவராயன் தாய், காத்தவராயனை மணந்து கொள்ள ஆரியமாலையை வேண்டினாள். சாதிமறந்து தாழ்ந்த குலம் என்று நினையாமல் ஆரியமாலை தன் மகனை மணந்துகொள்ள வேண்டினாள். திருமணம் நடக்கும் தருவாயை எட்டியது. காதல் சாதி மதம் கடந்து பரவும் குணமுடையது என்பதைக் கூறும் கதை இது.

4. இந்திர கோபம் (கூ.பி., பக்.133-140)

அம்மு என்ற பெண் இந்திர கோப பூச்சியைப் பிடித்து வந்து தன் அம்மாவுக்குப் பரிசாகக் கொடுத்தாள். மகள் அம்முமீது மிகுந்த பாசம் உள்ளவள் தாய். பூச்சியைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் பள்ளி சென்றாள். மாலையில் பூச்சியைக் காணவில்லை. இரவு முழுவதும் அம்மு அழுதாள். காலையில் அது இருந்த டப்பாவில் ஒட்டிக் கொண்டிருந்ததைக் கண்டனர். அம்மு மகிழ்ந்து அம்மாவிடம் கவனிக்கும்படி கூறிச் சென்றாள். அந்தப் பூச்சி நெலிவதைக் கண்டு வருந்திய அம்மா அதை வெளியில் எடுத்துவிட்டாள். அம்மும் வந்து அழுதாள். மீண்டும் குளிர்காலம் வருவதை அம்மு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இக்கதையை “குழந்தை உள்ளச் சித்திரிப்பு” என்கிறார் ரவிக்குமார்.(ரவிக்குமார், “முன்னுரை”. ப.11) சங்க இலக்கியம் அகநானூற்றில் வரும் “. . . இடையிடைச்/ செம்புற மூதாய் பரத்தலின்” (அகம்.134:3-4) என்ற தொடர்களுக்கு, உரையாசிரியர் புலியூர்க் கேசிகன், “நீலமணியைப் போலும் காயாம்பூவின் அழகிய மலர்களின் இடையிடையே, சிவந்த முதுகினையுடைய இந்திரகோபப் பூச்சி (தம்பலப்பூச்சி) பரவி ஊர்தலினாலும்” என்று தலைவியை பிரிந்த தலைவன் திரும்ப வருதலை உணர்த்துதற்கு கார்காலப் பயன் பற்றி எடுத்தோதுகின்றார் (புலியூர்க் கேசிகன், ப.41)

5. உயிர் வேலி (கூ.பி., பக்.123-132)

ஒரு பெண் ஆராய்ச்சிக்காக ஓர் ஆய்வுக் கூடத்திற்குச் செல்கிறாள். அங்குத் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறாள். ஆய்வுக்கூடப் பெண்ணின் தந்தையிடம் தான் படித்ததாகவும் தெரிவிக்கிறாள். ஆய்வாளர் வீட்டுக்கும் ஆய்வுக்கூடப் பெண்ணின் வீட்டுக்கும் வேலிப் பிரச்சினை இருக்கிறது. அதனை ஆய்வுக்கூடப் பெண் கூறுகிறாள். ஆய்வாளர் அண்ணன் முரட்டுத்தனமாக வேலியை வெட்ட முடியாது என்று கூறிவிட்டான். பின்னர் ஆய்வாளர் அண்ணனைச் சமாதானம் செய்து வேலி வெட்டப்பட்டது. பெண்கள் சமாதானமாக முயன்றது வெற்றியானது. வேலியை வெட்டச் சொன்னவர் இஸ்லாமியர். கல்வியாளர்கள் ஒத்துப்போகும் பண்பு இதன்கண் உள்ளது. “நாகரிக உலகின் அடையாளம் தொழில் வளர்ச்சி என்பர்” (அ.தட்சிணாமூர்த்தி, ப.28). சமாதானமும் இதனைச் சாரும்.

6. ஊமத்தை (கூ.பி., பக்.83-90)

முதுமைப் பெண் சாராயம் விற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தாள். அதைத் தயார் செய்வது பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. அவள்மீது வழக்குப் போட்டனர். நீதிமன்றத்தில் வழக்கறிஞர் கேட்ட

கேள்விகளுக்குப் பதில் சொல்ல இயலவில்லை. எல்லாவற்றையும் விசாரித்த பின் வெளியேறினாள் மூதாட்டி. இரவில், குற்றமெல்லாம் செய்த பேரன்களுக்காக அவள் வழக்கைச் சுமந்துகொண்டாள். போலீஸ்காரர்களும் அதிகாரிகளும் வீட்டுக்கு வருவது அவளுக்கு அச்சத்தை உண்டாக்கியது. ஊமத்தங் காயைச் சாராயத்தில் கலந்த குற்றம் அவள் மேல் பாய்ந்ததை எண்ணி அழுதாள். இரவு யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினாள். "முதியோரை இச்சமூகம் நடத்தும் போக்கை" இக்கதை காட்டுகிறது (ரவிக்குமார், "முன்னுரை", ப.11)

7. ஒளிவித்து (கூ.பி., பக்.29-35)

திருமணமான வாலிபன் ஒருவன் மனைவி மக்களுடன் இல்லறம் நடத்தி வருகிறான். சில நாட்களுக்குப் பின்னர் அவனை விட்டு அவர்கள் பிரிந்து விட்டார்கள். மீண்டும் திரும்பி வருவார்கள் என்று அவன் காத்திருந்தான். வரவில்லை. மனைவியுடன் நடத்திய அகவாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறான். கனவிலும் நனவிலும் அவள் வந்து போனாள். சிறு வண்ணத்துப்பூச்சியாக, அழகிய பறவையாக, வண்டாக, அழகிய இயற்கைப் பொருள்களாக, சிறு பெண்ணாக, ஆப்பிரிக்க பெண்ணாக, காதலியாக நினைவில் அவள் வருகிறாள். அவன் நெருங்கிப் பேசமுனையும் போது பிரிந்து விடுகிறாள். கணவனின் நினைவலைகளால் அவள் வந்து போகிறாள். பிரிவின் துயரம் இது.

8. கன்னி (கூ.பி., பக்.152-159)

ஒரு பெண் தனியாக அறையில் தூங்கிக் கொண்டிருந்தாள். கனவில் ஒரு கன்னி (பெண்) தோன்றினாள். கால்கள் இல்லை. குருதி வடிந்து வந்தது. பயந்து கண்விழித்தாள். அதன்பின் வேறு வேறு கனவுகள். சில கனவுகளைக் கண்டு தன் மகள் கர்ப்பமாவாள் என்று எண்ணினாள். மீண்டும் பயமுறுத்தும் கனவுகள். ஊரில் காளிக்கு விழா நடந்தது. காளி கனவில் வந்து பயமுறுத்தினாள். நெருப்பு மழையைக் கனவில் கண்டாள். சோதிடனும், குடுகுடுப்பைக்காரனும் ஒரு கன்னி அவள் வீட்டைச் சுற்றி நிற்பதாகக் கூறினார்கள். ஒருமுறை கிடாவெட்டிக் காளிக்குப் படையலிட்டாள். எல்லார்க்கும் விருந்து நடத்தினாள். "இதுதான் தங்கள் குலதெய்வம்" (ப.159) என்று தன் மகளுக்குக் கூறினாள். இது தலைமுறை தாண்டி கடைப்பிடிக்கும் மரபாகக் கொள்ளமுடிகிறது.

9. குடைவரை (கூ.பி., பக்.107-113)

சித்தன்னவாசல் முகப்பு மண்டபத்தில் இசைக் கச்சேரி நடந்தது. அதனைக் காண ஓர் இளம்பெண் செல்கிறாள். இசையை ரசித்த அவள் அங்குள்ள முகப்பு மண்டபத்தையும், சிற்பங்களையும் கண்டு வியக்கிறாள். தீர்த்தங்கரர் பாசுவநாதர், மற்றும் ஆச்சார்யார் ஆகிய இருவரும் அமர்ந்திருந்த காட்சி அழகு பற்றி எண்ணிப் பார்க்கிறாள். கருவறைக்குள் நிறையத் துறவிகள் அமர்ந்திருந்தனர். முகப்பு மண்டபத்தில் வரையப்பட்டிருந்த தாமரைத் தடாகத்தில் மலர்கள் மேலெழும்பி வளர்வது போலிருந்தது. படைப்பாளியின் ரசனை உணர்ச்சியைக் கூறுவது இது.

10. கூனல் பிறை (கூ.பி., பக்.114-122)

கணவன் மனைவி இருவரும் மனப் பிறழ்வுடைய நோயாளிகள். இரயிலில் பயணம் செய்கின்றனர். பெண்ணின் இரு குழந்தைகளும் செல்கின்றனர். அவள் தடுமாறித் தடுமாறிப் பேசுகிறாள். அவள் செய்கை தவறும்போது குழந்தைகள் சென்று உதவுகின்றனர். கழிவறைக்கு அழைத்துச் செல்கின்றனர். முன்சீட்டில் கணவன். அவளை நினைத்துப் புலம்புவனாகத் தனியே பேசிக் கொண்டே வருகிறான். அங்கு யாரும் இல்லை. யாரிடமோ பேசிக் கொண்டிருப்பது போல அவனுடைய பேச்சு இருந்தது.

11. சூலகக் கூடு (கூ.பி., பக்.160-166)

இளைஞன் ஒருவன் அதிகாலை எழுந்தான். எதிரே இருந்த கல்லூரிப் பக்கம் சிறுநீர்க் கழிக்கச் சென்றான். அங்கே ஓர் உருவம் தெரிந்தது. பயந்து வீடு திரும்பிவிட்டான். ஒருநாள் விடியற் காலையில் கல்லூரிச் சாலையில் கூட்டம். என்னவென்று போய்ப்பார்த்தான். ஒரு பெண்ணை நான்கைந்து பேர் தாக்கிக் கொண்டிருந்தார்கள். அவள் உளவு பார்க்க வந்தவள். இரவில் ஆண்கள் வந்து திருடுவார்கள் என்றனர். மேலும் அவள் இவன் வீட்டில் எதிரில்தான் நின்றாள் என்றும் கூறினார்கள். மௌனமாய் வீடு வந்து சேர்ந்தான். சூலகக் கூட்டில் என்ன நடக்கிறதென்றே தெரியாது.

12. தற்சுட்டு (கூ.பி., பக்.36-44)

கூனல் பிறையின் சிறுமி கற்பனை. அவள் தாய் கணவனிடம் சண்டையிட்டு வெளியில் கிளம்பிப் போய்விடுகிறாள். மகள் தனியாக இருக்கிறாள். அம்மா நினைவோடு இருக்கிறாள். அப்பா வந்ததும் சமையல் தொடங்குகிறாள். இரவில் தூக்கம் இல்லாமல் வாடுகிறாள். பள்ளி செல்லும் போதும் உடை முதலியன அணிந்துகொள்ளும் போதும் அம்மாவை நினைத்து அழுகிறாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை அடிக்கடி வருகிறது. கதை முழுவதும் ஒரு மகள் தனிநிலையை மிகுதியாக உணர்த்துகிறது. கோயிலின் சிறப்பைக் கூறவருவோர், “தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை” என்றனர். ***(க.கைலாசபதி, ப.34)***

13. தீம்பழம் (கூ.பி., பக்.52-64)

ஒரு பெண் வீட்டிலிருந்து சன்னல் வழியாக வெளியே பார்த்தாள். அங்கொரு பாம்பு தலையைத் தூக்கி ஆட்டிக் கொண்டிருந்தது. தன் அப்பாவைக் கூப்பிட்டுக் கூறினாள். அப்பா வந்தபோது பாம்பு மறைந்துவிட்டது. பாம்புகள் அடிக்கடி அந்த வீட்டுக்கு வரும். ஒருமுறை பாம்பு அவனுடைய அலமாரியில் வந்தது. அந்தப் பாம்பு அவனிடம் பேசியது. பாம்பைக் கண்டு அவன் கைத்தட்டிச் சிரித்தான். பாம்பும் அவனும் உரையாடியது இனிமையாக இருந்தது. பாம்பு யாரையும் தீண்டியது இல்லை. அப்பா பாம்பை அடித்துக் கொன்றுவிடுவார். பாம்பு அலமாரியில் புகுந்து இருந்தது. மனிதர்களைக் கடிக்கவில்லை. தோழிகளைக் கடித்துக் கொன்றது. சத்தியவாக்குக் கொடுத்தது போல் மனிதர்களை அது ஒன்றும் செய்யவில்லை. வீட்டில் பழங்களைத் தின்றிடப் பாம்பு முயன்றது. பாம்பைக்

கண்டு ஏற்படும் அச்சம் கதையாக வந்துள்ளது. “கலை உள்ளங்களில் ஏற்படும் மனச்சிதறல்கள் சிறுகதைகளாகப் பிறக்கின்றன.” (சுந்தர ராமசாமி, ப.125)

14. நரிக்காட்டுத் திடல் (கூ.பி., பக்.65-72)

ஊருக்கு வெளியே நரிக்காட்டுத் திடல் என்ற பெரிய இடம் இருந்தது. மகிமை, சுவாமிநாதன் என்ற இரு நண்பர்களும் அங்குச் சென்று விளையாடி வருவது வழக்கம். மகிமையின் ஆத்தா பேய் பற்றிய கதைகள் நிரம்பக் கூறுவாள். பேயுடன் இருவரும் பழகத் தொடங்கினார்கள். பேய் அவர்களுக்கு விசித்திரமாக இருந்தது. பேய்க்குக் காலில்லை. அதைக்கண்டு மேலும் விருப்பப்பட்டுப் பழக ஆரம்பித்தார்கள். சிலரை இரவு நேரத்தில் அடித்துக் கொன்றது. ஒரு கோயிலின் முன்னர் அதன் உயரமான முழுஉருவத்தையும் பார்த்துப் பயந்து ஓடிவந்து விட்டார்கள். இது மக்களிடம் பேய் பற்றி இருந்த நம்பிக்கையைக் காட்டுவது.

15. நாணல் காடு (கூ.பி., பக்.20-28)

“சந்திரா” நாணல் காடு கதையில் வரும் பெண். நடுத்தர வயது. அவளுடைய கணவர் பன்னீர். இருவரும் உழவுத் தொழிலாளர்கள். சந்திரா எப்பொழுதும் நடவு முதலிய வேலைகளைச் செய்தே வாழ்க்கை நடத்துகிறாள். பன்னீரும் உழைப்பாளிதான். பன்னீர் ஒரு சைக்கிள் வைத்திருந்தான். அதில் மாலை நேரத்தில் சந்திராவை உட்கார வைத்து அழைத்துச் செல்வான். போதிய பயிற்சியின்மையால் தடுமாறிச் சாலையோரம் விழுந்து விட்டனர். இருந்தும் அடுத்தடுத்த நாட்களில் நன்றாகச் சைக்கிள் ஓட்டினான் பன்னீர். ஒருநாள் அவ்வாறு செல்லும்போது தடுமாற்றம் இல்லாமல் மனைவியைக் கொண்டுவந்து சேர்த்தான். சந்திரா ஊரிலும் பிள்ளைகளிடமும் அதைப் பெருமையாகக் கூறினாள். பன்னீர் இரவு உறங்கிவிட்டான். சந்திரா காலையில் அவனை எழுப்பினாள். எழுந்திருக்கவில்லை. கண்திறக்காமல் உடல் கிடந்தது.

16. நீர்முள்ளி (கூ.பி., பக்.45-51)

சிறுமியின் படம் சுவற்றில் மாட்டப்பட்டிருப்பதும் இளைஞன் அந்தப் படத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளைப் பற்றி நெகிழ்வுடன் நினைத்தான். நீர்முள்ளிச் செடியைப் போல நினைவுகள் அவனைக் குத்தின. அவள் பாலைவனத்தில் தனியாக நிற்பதுபோல் தோன்றினாள். அவளைக் கவலை கொள்ளாமல் இருக்கச் சொன்னான். “காப்பாற்றுவேன்” என்றான். “அப்பாவையும் தம்பி, அம்மா ஆகியோரையும் பார்க்க வேண்டும்” என்றாள். வேறொரு நாள் பாலையில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் பாலையின் சூடுதாங்காமல் தவித்தாள். அவள் கேட்ட சில கேள்விகளுக்குப் படத்திலிருந்த ஓவியத்தில் தேடினான். இது ஒருமனநிகழ்வு — கனவு.

17. பாழ்வாய் உலகு (கூ.பி., பக்.167-176)

இக்கதையில வருபவர் போலீஸ்காரர். வட்டிக்குப் பணம் கொடுப்பவர். ஊரில் பலர் அவரிடம் பணம் வாங்கியிருந்தார்கள். அரையும் குறையுமாகக் கொடுத்தார்கள். சிலர் கொடுக்காமலே ஏமாற்றி

வந்தனர். அவருக்கு வாதநோய் வந்தது. படுக்கையில் வீழ்ந்தார். அந்த வழியில் செல்பவர்கள் அவரைத் திரும்பியும் பார்ப்பதில்லை. முகத்தை மறைத்துப் போனார்கள். மகனிடம் சொல்ல நினைத்ததையும் சொல்ல இயலவில்லை. அவன் சொல்வது அவருக்குப் புரியவில்லை. அப்படியே உறங்கிப் போனார். வாங்கியதைக் கொடுக்க மனமில்லாத மக்கள் ஆபத்திலும் உதவார். இதனை வள்ளுவர், "உள்ளத்தால் உள்ளலும் தீதே/ பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்." (குறள்.282) என்று மனத்தால் நினைக்கவும் கூடாது என்கிறார்.

18. பூர்வ பௌத்தன் (கூ.பி., பக்.141-151)

சிவபெருமானாகிய மங்கைபாகன் அமர்ந்திருக்கும் காட்சி அந்தக் கோயில் மண்டபத்தைச் சிறப்பித்தது. இன்னும் பல சிற்பங்கள் அழகழகாகத் தோன்றின. இதையெல்லாம் இளைஞன் ஒருவன் பார்த்துப் புள்ளி விவரங்களைச் சேர்த்துக் கொண்டு வந்தான். அங்கே இன்னொரு மூலையில் ஒரு பெண் நின்றிருந்தாள். அவள் அவனைச் சந்தித்தாள். அவன் செய்யும் செயல்கள் பற்றி விவரம் அறிந்தாள். அது ஒரு கல்வெட்டு ஆராய்ச்சி என்பதையும் புரிந்துகொண்டாள். அவன் பெயர் பூர்வபௌத்தன். அந்தச் சிற்ப மண்டபத்துக்கு வந்த இளைஞர் சிலருக்கும் சண்டை வந்தது. அவளைப் பார்த்து பௌத்தன் "தப்பித்துப் போய்விடு" (ப.150) என்றான். வீடு வந்து சேர்ந்ததும் தன்னைக் காப்பாற்றியது சிற்பங்கள் அல்ல பூர்வ பௌத்தன்தான் என்று விடை பகர்ந்தாள். பௌத்த மனம் பற்றிய சிறப்பு இது. கனவில் கண்டது உண்மையாக வேண்டும் என்ற மனம். "கனவு மெய்ப்பட வேண்டும்" என்று பாரதி கூறினான்.

19. யசோதரா (கூ.பி., பக்.13-19)

சித்தார்த்தன், யசோதராவை நள்ளிரவில் அரண்மனையில் விட்டு விட்டு யாரும் அறியாமல் வெளியேறி விடுகிறான். பின்னர் ஞானம் பெற்று புத்தர் என்ற பெயரில் ஞானியாகிறார். சில ஆண்டுகளுக்குப் பின் வீட்டுக்கு வருகிறார். புத்தனைப் போலவே யசோதராவும் துறவு மனநிலையில் இருக்கிறாள். புத்தரைக் கண்டதும் பழைய நினைவுடன் அவரை வாரி அணைக்கிறாள். ஆசைகளைத் துறந்த புத்தர் வெளியேறிவிடுகிறார். புத்தரின் சீடர்கள் அவருடைய போதனையை ஆராய்ந்து பேசிய வண்ணமிருக்கிறார்கள்.

முடிவுரை

பெண்ணிய, நவீன, தலித்தியச் சிறுகதைகள், வாய்மொழி மரபுச் சிறுகதைகள் என்று பல பெயர்களில், பல அடையாளங்களில் எழுதப்பட்டாலும் எல்லாக் கதைகளுமே தமிழ் வாழ்வைத்தான் எழுதுகின்றன. மற்றக் காலங்களைவிட இக்காலத்தில்தான் சிறுகதைக்கான கூறுகள், வடிவம், மொழி, உள்ளடக்கம், எல்லை, கதாசிரியரின் நிலை குறித்த தெளிவு ஏற்படச் செய்திருக்கிறது.

"அவரோகி" உடல் நலமில்லாத தந்தை தம் கை, கால்கள் இழுத்துக் கொண்டதும்; பேச்சு உளறல், சிரிப்பது, அழுவது ஆகியன செயல்கள். உறவுகளைப் போற்றும் கதை. "ஆரியமாலை" சாதி மதம் கடந்து பரவும் குணமுடைய காதல் பற்றிய கதை. "இந்திர கோபம்" குழந்தையின் உள்ளச்

சித்திரிப்பு வெளிப்படுத்துகிறது. “பூர்வ பௌத்தன்” கதையில் கனவில் கண்டது உண்மையாக வேண்டும் என்ற பௌத்த மனம் பற்றிய சிறப்பு உணர்த்தப்படுகிறது. “உயிர் வேலி” கதையில் பெண்கள் சமாதானமாக முயன்று வெற்றி கிட்டியதும்; கல்வியாளர்கள் ஒத்துப்போகும் பண்பும் இதன்கண் வெளிப்படுகிறது. “ஊமத்தை” கதை முதியோரை இச்சமூகம் நடத்தும் போக்கை” விளக்குகிறது. “ஒளி வித்து” கதை முன்னைய காதலர்களின் பிரிவின் துயரம் பற்றி நுவல்கிறது. “கன்னி” கதை குலதெய்வவழிபாடு தலைமுறை தாண்டி கடைப்பிடிக்கும் மரபினை தாய் மகளுக்குச் சொல்வது. “குடைவரை” கதை படைப்பாளரின் இரசனை உணர்ச்சியைக் கூறுகிறது. “தற்சுட்டு” கதை முழுவதும் தாயை இழந்த ஒரு மகள் தனிநிலையை மிகுதியாக உணர்த்துகிறது. “கூனல் பிறை” கதை கணவன் மனைவி இருவரின் மனப்பிறழ்வு பற்றி சமூகத்திற்குச் சுட்டி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. “நரிக்காட்டுத் திடல்” கதை மக்களிடம் இருக்கும் பேய் பற்றிய நம்பிக்கையைக் காட்டுகிறது. “நாணல் காடு” கதையில் கணவன் மனைவி இருவரும் உழவுத் தொழிலாளிகள். கணவன் சைக்கிள் ஓட்டிப் பழகுகிறான். ஊர் பிள்ளைகளின் கேலிக்கு ஆட்படுவதை யதார்த்தமாக எடுத்துக் கூறுகிறது. “நீர்முள்ளி” கதை இளைஞனின் கனவு, பல்வேறு மனநிகழ்வுகளை உண்டாக்குகிறது. “பாழ்வாய் உலகு” கதை பிறன் பொருளை வஞ்சகமாகக் கவர்தல் சமூகக் கேடு என்று உணர்த்துகிறது. இது போலீஸ்காரர் வட்டிக்குப் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் செயலைச் சுட்டிக் காட்டுகிறது. “பூர்வ பௌத்தன்” கதை மனிதர்கள் தாங்கள் காணும் கனவு மெய்ப்பட வேண்டும் என்று விரும்புவதை எடுத்துக் காட்டுகிறது. “யசோதரா” கதை மனிதர்கள் ஞானம் பெறும் வழியைக் கூறுகிறது. ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு விதத்தில் ஏதோ ஒரு வகையில் சமூகத்தை கண்டிப்பதும்; நல்ல நெறிகளைப் பின்பற்றி ஒழுகச் செய்வதும்; இன்னபிற நல்ல ஒழுக்கங்களை மனித சமூகத்திற்கு வலியுறுத்திக் கூறுகின்றன.

துணைநூற் பட்டியல்

இராமலிங்கம், மா., *விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்,* முத்தமிழ்ப் பாசறை, திருச்சிராப்பள்ளி, இரண்டாம் பதிப்பு, 2001. [March Schorer, “Technique as discovery”. *20th Century Literary Criticism*. Ed. David Lodge, p.387 — The difference between content, or experience, and achieved content, or art, is technique].

கமலா விருத்தாசலம். *நினைவுத் தீ : சிறுகதைகள்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2025.

குணசேகரன், அ. “பற்றி”, ப.53. *இல்லாமல் இருத்தல்.* ஆசிரியர்: அ.குணசேகரன், கவிக்குயில் பதிப்பகம், கும்பகோணம், முதற் பதிப்பு, 2011:53-54.

கேசவன், கோ., *தமிழ்ச் சிறுகதைகளில் உருவம்,* அன்னம் (பி) லிட்., சிவகங்கை, முதற் பதிப்பு, 1988.

கைலாசபதி, க. *நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்.* மக்கள் வெளியீடு, சென்னை, முதற் பதிப்பு, 1980.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ் அகர முதலி*, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, நான்காம் பதிப்பு, 2022.

சுந்தர ராமசாமி. "கலைகள், கதைகள் சிறுகதைகள்." தொகுப்பாசிரியர்: சுப்பரமணி ரமேஷ். *தமிழ்ச் சிறுகதை: வரலாறும் விமர்சனமும்*, காலச்சுவடு, நாகர்கோவில், முதற் பதிப்பு, 2019:125-136.

சுப்பிரமணி ரமேஷ். "தற்காலப் பெண் சிறுகதைகள்", ப.212. *தமிழ்ச் சிறுகதை : வரலாறும் விமர்சனமும்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., நாகர்கோவில், முதற் பதிப்பு, 2019:212-233.

சுப்பிரமணி ரமேஷ். *தமிழ்ச் சிறுகதை : வரலாறும் விமர்சனமும்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., நாகர்கோவில், முதற் பதிப்பு, 2019.

சுப்பிரமணியம், க.நா. *விமரிசனக் கலை.* சென்னை, இரண்டாம் பதிப்பு, 2020.

சுப்பிரமணியன், ச.வே. *தமிழ் இலக்கிய வகையும் வடிவும்*, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1967.

செந்தமிழ்ச்செல்வி, தி. *மணிக்கொடி சிறுகதைகளில் மகளிர்.* குடியரசி பதிப்பகம், சென்னை, மு.ப., 2001.

தட்சிணாமூர்த்தி, அ. *சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள்*, ப.28. மங்கையர்க்கரசி பதிப்பகம், தஞ்சாவூர், 2001

தேன்மொழி (தொ.ஆ.). *வரலாற்றை எழுதும் பெண்கள் — ஐந்து பெண் வரலாற்று அறிஞர்கள் குறித்த அறிமுகமும் படைப்புகளும்.* மணற்கேணி பதிப்பகம், விழுப்புரம், இரண்டாம் பதிப்பு, 2023.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). *அகநானூறு (மணிமிடை பவளம்)* (1960). பாரி நிலையம், சென்னை, மறுபதிப்பு, 2006.

முருகன், வெ. (ப.ஆ.). *பால்ஸ் தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை

ரவிக்குமார். "குறியீடுகளை வாசிக்க வேண்டும்" (தொகுப்பாசிரியர்: ரவிக்குமார், *சுந்தர ராமசாமியின் பிள்ளை கொடுத்தாள் விளை*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2006:3-19.

ரவிக்குமார். "முன்னுரை." *கூனல் பிறை சிறுகதைகள்.* தேன்மொழி, மணற்கேணி, சென்னை, முதற் பதிப்பு, 2014:9-11.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.). *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்)* க்ரியா வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 2018.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (ப.ஆ.) *தமிழ் லெக்சிகன்*, அநுபந்தம் பகுதி-1, ப.155. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1982.

References

Ramalingam, Ma., Viduthalaikku Mun Puthiya Tamil Sirukathaigal, Muthamilpasarai, Tiruchirapalli, Second Edition, 2001. [March Schorer, "Technique as discovery". 20th Century Literary Criticism. Ed. David Lodge, p.387 — The difference between content, or experience, and achieved content, or art, is technique]

Kamala Viruthachalam. Ninaivu Thee : Sirukathaikal. Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2025.

Gunasekaran, A.. "Patri", p.53. Illamal Iruthal. Author: A.Gunasekaran, Kavikuyil Pathippagam, Kumbakonam, First Edition, 2011:53-54.

Kesavan, Ko., Tamil Sirukathaikalil Uruvam, Annam (P) Ltd., Sivagangai, First Edition, 1988.

Kailasapathy, Ka. Naveena Ilakkiyathin Adippadaikal. Makkal Veliyeedu, Chennai, First Edition, 1980.

Shanmugam Pillai, M. (Ed.). Tamil-Tamil Agara Muthali, Tamilnadu Paadanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, Fourth Edition, 2022.

Sundara Ramasamy. "Kalaikal, Kathaikal Sirukathaigal." Ed: Subramani Ramesh. Tamil Sirukathai: Varalarum Vimarsanamum, Kalachuvadu Publications, Nagarcoil, First Edition, 2019:125-136.

Subramani Ramesh. "Tharkala Pen Sirukathaikal", p.212. Tamil Sirukathai : Vararum Vimarsanam. Kalachuva Publications (P) Ltd., Nagarcoil, First Edition, 2019:212-233.

Subramani Ramesh. Tamil Sirukathai : Varalarum Vimarsanamum. Kalachuvadu (P) Ltd., Nagarcoil, First Edition, 2019.

Subramaniyam, K.N. Vimarisana Kalai. Chennai, Second Edition5, 2020.

Subramaniyan, S.Ve. Tamil Ilakkiya Vagaiyum Vadivum, Tamil Pathippagam, Chennai, 1967.

Senthamilselvi, T. Manikodi Sirukathaikalil Magalir. Kudiyarasi Pathippagam, Chennai , First Edition, 2001.

Dakshinamoorthy, A. Sanga Ilakkiyangal Unarthum Manitha Unarvugal, p.28. Mangayarkarasi Pathippagam, Thanjavur, 2001

Thenmozhi (Ed.), *Varalatrai Ezhuthum Pengal — Iynthu Pen Varalatru Arignarkal Kuritha Arimugamum Padaippugalum.* Manarkeni Pathippagam, Viluppuram, Second Edition, 2023.

Puliyoorkesikan (Ed.). *Akananooru (Manimidai Pavalam)* (1960). Pari Nilayam, Chennai, Reprint, 2006.

Murugan, Ve. (Ed.). *Paals tamil-Tamil-English Agarathi.* Palaniyappa Brothers, Chennai.

Ravikumar. "Kuriyeedukalai Vasikka Vendum" (Ed: Ravikumar, *Sundara Ramasamiyin Pillai Koduthal Vilai*, Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2006:3-19.

Ravikumar. "Munnurai." *Koonal Pirai Sirukathaikal.* Thenmozhi, Manarkeni, Chennai, First Edition, 2014:9-11.

Ramakrishnan, S. (Ed.). *Kriyavin Tharkala Tamil Akarathi (Tamil-Tamil-English)* Kriya Veliyeedu, Chennai, Reprint, 2018.

Vaiyapuripillai, S. (Ed.) *Tamil Lexicon*, Anupandam Part-1, P.155. Chennai University, Chennai, Sixth Edition, 1982.

ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com